வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No.: P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 20.10.2025 திங்கட்கிழமை இதழ் : 293 பக்கங்கள் : 08

## வல்வை படுகொலை:

# ரூ. 450 கோடி இழப்பீடாக இந்தியா வழங்கவேண்டும்

### சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயல்திட்டம்

- த. பிரதீபன், சி. தில்லைநாதன் -

வடமராட்சி, ஒக்ரோபர் 20

இந்திய அமைதி காக்கும் படையினரால் 1989ஆம் ஆண்டு வல்வெட்டித்துறையில் நடத்தப்பட்ட படுகொலைகளில் கொல்லப்பட்ட, காயமடைந்தவர்கள் மற்றும் ஏற்படுத்தப்பட்ட சொத்து இழப்புகளுக்கு 450 கோடி ரூபாயை இழப்பீடாக வழங்க வேண்டும் என்று சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயல் திட்டம் பரிந்துரைத்துள்ளது.

வல்வை படுகொலையின்போதான இழப்புகளுக்கான இழப்பீட்டு பரிந்துரை அறிக்கை வெளியீடு, கடந்த மார்ச் மாதம் வெளியிடப்பட்ட வல்வெட்டித் துறை ஒரு படுகொலையின் வாக்குமூலங்கள் நூல் வெளியீடு என்பன நேற்றைய தினம் வடமராட்சி ஊடக இல்லத்தில் நடைபெற்றன.

வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவின் அனுசரணையுடன் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயல் திட்ட அமைப்பால் தயாரிக்கப்பட்டுள்ள

07




## வரும் 23 முதல் 28ஆம் திகதி வரை கடல் கொந்தளிப்பாக இருக்கும்!

யாழ்ப்பாணம், ஒக். 20

எதிர்வரும் 23ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை வடக்கு, கிழக்கு மற்றும் தென்கிழக்குக் கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படும். ஆதலால், கடற்றொழிலாளர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும் என்று யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல்துறையின் தலைவரும் வானிலை ஆய்வாளருமான பேராசிரியர் நா. பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள

07

## வல்வெட்டித்துறை படுகொலைக்கு இந்தியா மன்னிப்பு கோரவேண்டும்

### வல்வை அனந்தராஜ் வலியுறுத்து

- சி. தில்லைநாதன் -

வடமராட்சி, ஒக். 20

வல்வெட்டித்துறை படுகொலைக்காக இந்திய அரசாங்கம் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும். ஏற்பட்ட இழப்புகளுக்கான நஷ்டஈட்டை முழுமையாக வழங்க வேண்டும் - என்று சமூக செயல்பாட்டாளர் ந. அனந்தராஜ் வலியுறுத்தியுள்ளார்.

"வல்வை படுகொலையின் போதான இழப்புகளுக்கான இழப்பீட்டு பரிந்துரை அறிக்கை" வெளியீட்டு நிகழ்வு நேற்றைய தினம் வடமராட்சி ஊடக இல்லத்தில் நடை



பெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்,

35 வருடங்களுக்கு முன்னர்

07

## அனைவரின் சுதந்திரம், கண்ணியத்தை பாதுகாக்கும் நாட்டை உருவாக்குவோம்!

### தீபாவளி வாழ்த்தில் ஜனாதிபதி

கொழும்பு, ஒக். 20

அனைவரும் தங்கள் அனைத்து சிவில் - அரசியல் - கலாசார உரிமைகளையும் தடையின்றி அனுபவிக்கக்கூடிய அனைவரின் சுதந்திரமும் கண்ணியமும் பாதுகாக்கப்படும் ஒரு பாதுகாப்பான நாட்டைக் கட்டியெழுப்பவும் நாங்கள் உறுதிபூண்டுள்ளோம் - என்று தனது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

அவரின் வாழ்த்துச் செய்தியில்,

உலகெங்கிலும் வாழும் இந்து மக்களால் மிகுந்த பக்தியுடன் கொண்டாடப்படும் தீபாவளி பண்டிகை இன்று



கொண்டாடப்படுகிறது. கிருஷ்ண பகவான் நரகாசுரனை அழித்தமையை நினைவு கூர்ந்து, அதர்மத்தை

07

## பொலிஸ் சான்றிதழ் தந்தாலே இனி வேட்புமனு வழங்கப்படும்

### பொதுஜன பெரமுன கட்சி அறிவிப்பு

கொழும்பு, ஒக். 20

"பெரும்பாலான இளைஞர்கள் எம்முடன் இணைந்துள்ளார்கள். போதைப்பொருள், பாதாள குழுக்களுடன் தொடர்பில்லை என்று பொலிஸ் சான்றிதழ் தருவோருக்கு மாத்திரமே தேர்தலில் போட்டியிட வேட்புமனு வழங்குவோம்" என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

07

### யாழ். சர்வதேச கிரிக்கெட் மைதானம்:

## கட்டுமானத்தை நிறுத்துமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்து

கொழும்பு, ஒக். 20

மண்டைதீவில் அமைக்கப்பட்டு வரும் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தின் கட்டுமானப் பணிகளை உடனடியாக நிறுத்துமாறு வனவிலங்கு, இயற்கை பாதுகாப்பு சங்கம் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.

சுற்றுச்சூழல் தாக்கத்தை கருத்தில்

07

### மனித உரிமைகள் பேரவையிடம்

## இலங்கை தொடர்பில் 112,348 ஆவணங்கள்!

ஜெனிவா, ஒக். 20

இலங்கையில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பில் கடந்த செப்ரெம்பர் முதலாம் திகதி வரை ஒரு இலட்சத்து 12 ஆயிரத்து 348 ஆதாரங்கள் திரட்டப்பட்டுள்ளன. இவற்றில் 7 ஆயிரத்து 459 ஆதாரங்கள் திறந்த மூலங்களாகவும் ஒரு இலட்சத்து 4 ஆயிரத்து 889 ஆவணங்கள் இரகசிய மூலங்களாகவும் கிடைத்துள்ளன என்றும் தெரியவருகிறது.

07

## போதை மாத்திரைகளுடன் 17, 18 வயதினர் மூவர் கைது

- பு. கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஒக். 20

போதை மாத்திரைகளுடன் யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதான மூவரும் 17, 18 வயதுடையவர்களாவர்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களிடமிருந்து 20 போதை

07

## காஸாமீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதல்!

காஸா, ஒக். 20

போர் நிறுத்தத்தை மீறி காஸா மீது நேற்று தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதில், ஹமாஸ் தளபதி ஒருவர் உட்பட ஐவர் கொல்லப்பட்டனர்.

போர் நிறுத்த மீறலுக்கு இஸ்ரேலும் ஹமாஸும் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தெற்கு காஸா மீது இஸ்ரேல் நடத்திய விமான குண்டுவீச்சில் ஹமாஸ் தளபதி ஒருவர் உட்பட ஐவர் உயிரிழந்தனர்.

07

## இன்னும் சில மாதங்களில் மாகாண சபைகள் தேர்தல்

### ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கை

கொழும்பு, ஒக்ரோபர் 20

இன்னும் சில மாதங்களில் நிச்சயமாக மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெறும். அந்தத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் இணைந்து போட்டியிடவுள்ளன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா தெரிவித்துள்ளார்

எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியும்

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணை, இரக்கம், அரவணைப்பு அனைவரிடமும் உருவாகட்டும்!

## ஆறு. திருமுருகன் தீபாவளி வாழ்த்து



யாழ்ப்பாணம், ஒக். 20

இந்தப் பிறவியில் நல்லவற்றை கற்று நல்லவண்ணம் வாழ்ந்து பிறர் வாழ நல்லன செய்வதே நம் கடனாகும். அதற்குரிய கருணை, இரக்கம், அரவணைப்பு அனைவரிடமும் உருவாகவேண்டும் - என்று செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் விடுத்துள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்த வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

இந்துமக்களின் இனிய பண்டிகைகளில் ஒன்று தீபாவளி. நரகாசுரன் என்ற அசுரன் அழிக்கப்பட்டு எல்லோரும் இன்புற்று வாழ கிருஷ்ண பரமாத்மா வழிதந்த நாள் இந்தத் திருநாள் ஆகும். இந்தப் புனித நாளில் சகலரும் ஆலயங்களுக்கு சென்று வழிபாடு செய்யுங்கள். வீடுகளில் மங்கல விளக்கேற்றி எல்லோரும் மகிழ்ச்சியாக வாழவேண்டும் என்று மன்றாடுங்கள். நீதியும் நிலையான தர்மமும் எங்கும் பிரகாசிக்க அனைவருக்கும் இதயபூர்வமான தீபாவளி நல்வாழ்த்துகள் உரித்தாகுக.

ஈழத்திருநாட்டில் எம் மக்கள் நிறைவாக வாழ இறையருள் கைகூட வேண்டும். எமது இளையதலைமுறை கல்வியிலும் ஏனைய துறைகளிலும் மீண்டும் சிறக்க இந்நாளில் அனைவரும் பிரார்த்திப்போம். மனிதநேயமற்ற மாசுகள் எம்மைச் சூழ்ந்து உலாவுகிறது. அவற்றில் போதைப்பொருள் முதலிடம் வகிக்கிறது. இக்கொடூரம் எம் மண்ணில் இருந்து முற்றாக விடுபட தெய்வங்களை வேண்டுகிறோம். அரிய பிறப்பாகிய மானிடப் பிறப்பின் மகத்துவத்தை அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும். இந்தப் பிறவியில் நல்லவற்றைக் கற்று நல்ல வண்ணம் வாழ்ந்து பிறர் வாழ நல்லன செய்வதே நம் கடனாகும். அதற்குரிய கருணை, இரக்கம், அரவணைப்பு அனைவரிடமும் உருவாக வேண்டும். தீபத் திருநாளாகிய ஒளியை நோக்கி நல்வழியில் பயணம் செய்வோம் - என்றுள்ளது. (ஐ)

# ஒவ்வொருவர் வாழ்விலும் நம்பிக்கை ஒளிவீசட்டும்

## வடக்கு ஆளுநர் நா. வேதநாயகன்

யாழ்ப்பாணம், ஒக். 20

ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் நம்பிக்கையும் சந்தோசமும் ஒளி வீசட்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தனது தீபாவளி வாழ்த்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் விடுத்த தீபாவளி வாழ்த்துச் செய்தியில்


ஒளியின் திருநாளான தீபாவளி, இருளை அகற்றி ஒளியைப் பரப்பும் நல் வழியைக் குறிக்கிறது. தீமையை வீழ்த்தி நன்மை வெற்றி பெறும் நினைவூட்டலாகவும் அன்பு, ஒற்றுமை மற்றும் அமைதி நிலவும் சமூகத்தை உருவாக்கும் ஊக்கமாகவும் இந்தப் பண்டிகை விளங்குகிறது.



நம் மனதிலிருந்தும் சமூகத்திலிருந்தும் இருள் - அறியாமை - பொறாமை - தீமை அகற்றி ஒளியை அறிவு - அன்பு - நம்பிக்கை பரப்பும் இந்த இனிய இந்த நாளில், ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் நம்பிக்கையும் சந்தோசமும் ஒளி வீசட்டும்.

இந்நாளின் ஒளி அனைவரின் இதயங்களிலும் நல்வாழ்வையும் செழிப்பையும் நிரப்பட்டும் - இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்...! - என்றும் கூறியுள்ளார். (ஐ)

# தீபாவளிக்கான கொள்வனவில் ஆர்வம் காட்டிய யாழ். மக்கள்!



யாழ்ப்பாணம், ஒக். 20

இந்து மக்களின் முக்கிய பண்டிகைகளில் ஒன்றான தீபாவளி இன்றைய தினம் கொண்டாடப்படுகிறது. இதையொட்டி நேற்றைய தினம் யாழ்ப்பாணம் நகரில் மக்கள் பொருட்கள் கொள்வனவில் ஈடுபட்டிருந்தனர்.

புத்தாடைகள், பட்டாசு வகைகள், இனிப்புப் பண்டங்கள், ஆபரணங்களை கொள்வனவு செய்வதில் மக்கள் பெரும் ஆர்வம் காட்டியிருந்தனர்.

அதிகளவான மக்கள் யாழ்ப்பாணம் நகரில் கூடியிருந்தமையால் சனநெரிசலும் காணப்பட்டது. (ஐ-05)

# சமூகநீதி வெளிச்சம் பரவ தீபாவளி வழிவகுக்கட்டும்

## அமைச்சர் சந்திரசேகர் வாழ்த்து



கொழும்பு, ஒக். 20


அநீதி இருள் விலகி சமூகநீதி வெளிச்சம் பரவ தீபாவளி வழிவகுக்க வேண்டும். அதற்குரிய பணியை நாம் செய்து வருகிறோம். எமது ஆட்சியில் அநீதிக்கு இடமில்லை. சமூக நீதி என்பதே முதன்மை கொள்கையாகும். எனவே, எமது ஆட்சியின் கீழ் நிச்சயம் இருள் நீங்கி, மக்கள் வாழ்வில் ஒளி பிறக்கும். - இவ்வாறு கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தனது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும், "ஊழல்வாதிகள், கொள்ளையர்கள், பாதாள குழுவினர், போதைப்பொருள் கடத்தல்காரர்கள் என தீங்கு விளைவிக்கக்கூடிய நரகாசுரர்கள் நம் மத்தியில் இன்னும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றனர். இவர்களின் செயல்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக மக்கள் எடுத்த அவதாரமே தேசிய மக்கள் சக்தி அரசாங்கமாகும்.

தீமையை நன்மை வென்றதை நினைவுகூரும் நாளாகவும் தீபாவளி கொண்டாடப்படுகிறது. அது உண்மைதான் கடந்த காலங்களில் இந்நாட்டை ஆண்டவர்கள் தீமைகளையே பெரிதும் இழைத்துள்ளனர். இதன் காரணமாகவே மக்களின் அரசாங்கமாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மலர்ந்துள்ளது.

இந்த நன்னாள் நாட்டுமக்களிடையே ஒற்றுமை உணர்வையும் நல்லெண்ணத்தையும் சகோதரத்துவத்தையும் பலப்படுத்த வேண்டும். அனைவர் வாழ்விலும் அமைதியையும் நல்லிணக்கத்தையும் வளமையையும் மகிழ்ச்சியையும் கொண்டு வரட்டும். அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்." - என்றுள்ளது.

# வவுனியாவில் களைகட்டியது தீபாவளியை ஒட்டிய வியாபாரம்



வவுனியா, ஒக். 20

தீபாவளி திருநாளை முன்னிட்டு வவுனியாவில் வியாபாரம் நேற்று களைகட்டியிருந்தது. அத்துடன், நகரில் அதிக சனநெரிசலும் காணப்பட்டது.

இந்து மக்களின் பண்டிகையான தீபாவளி இன்றைய தினம் உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. இதையொட்டி, புத்தாடைகள், பட்டாசுகள், இனிப்பு பண்டங்கள் கொள்வனவில் மக்கள் ஆர்வம் காட்டியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ-10)

# தேசிய சமூக பாதுகாப்பு திட்டம்; பருத்தித்துறை செயலகம் முதலிடம்

வடமராட்சி, ஒக். 20

சமூகப் பாதுகாப்புக்கான தேசிய விருது வழங்கும் நிகழ்வு இலங்கை சமூக பாதுகாப்பு சபையால் கடந்த வியாழக்கிழமை திருகோணமலையில் நடைபெற்றது.

இந்த விருது வழங்கும் நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலகம் பண சேகரிப்பின் அடிப்படையில் தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டதுடன் பயனாளிகள் இணைப்பின் அடிப்படையில் தேசிய ரீதியில் ஐந்தாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

இவற்றுக்கான விருதை இலங்கை சமூகப் பாதுகாப்பு சபையின் தவிசாளர் டி. எம். கே. திஸநாயக்கவிடம் இருந்து பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் முன்னாள் செயலரும் தற்போதைய வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளருமான சி.சத்தியசீலன், பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் உதவி



செயலர் பசுபதி தயானந்தன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

மேலும் தனிப்பட்ட அடைவு மட்டங்களுக்கான தேசிய விருதை பொலிகண்டி மேற்கு கிராம அலுவலர் சா. அ. ரதீஸ்கரன், அல்வாய் மேற்கு கிராம அலுவலர் ர. பாலலோஜினி, அல்வாய் வடமத்தி கிராம அலுவலர் கு.பத்மலதா, புலோலி மத்தி கிராம அலுவலர் ஜெ.சங்கீதா, புலோலி தெற்கு கிராம அலுலர் சு. விஜிதா, அபிவிருத்தி உத்தியோகத்தர்களான பா. மனோராஜ், ம. மிதுரன், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ. திருத்தேவி ஆகியோர் பெற்றுக் கொண்டனர். (ஐ-02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈළනාඩු
20.10.2025 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், ஐப்பசி 03

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அரசியல்வாதிகளின் பிரச்னை

மாகாண சபைகள் தேர்தலை நடத்த வேண்டும். அதனைத் தொடர்ந்தும் தாமதிப்பதானது அநீதியானது. அதிலும், நீதி பற்றியும் ஊழல் பற்றியும் பேசிவரும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அவ்வாறு செய்வதானது நியாயமற்றது என்னும் குரல்கள் தமிழ் கட்சிகள் மத்தியிலிருந்து வெளிவருவது வரவேற்கக்கூடிய விடயம். ஆனால், மறுபுறம் கட்சிகள் தங்களுக்கிடையிலான அவசியமற்ற - மக்களுக்கு எந்தவகையிலும் பயன்பட முடியாத மோதல்களை தொடர்வதானது ஒருவேளை மாகாண சபைகள் தேர்தல் நடைபெற்றாலும் மாகாண சபையை கைப்பற்றினாலும் கூட, இவர்கள் அதனை உச்சபட்சமாக - மக்களுக்கு பயனுள்ள வகையில் பயன்படுத்துவர்களா என்பது சந்தேகமானது. அப்படிப் பார்த்தால் இவ்வாறானவர்களிடம் மாகாண சபை சிக்கி சீரழிவதை விடவும் அந்தத் தேர்தல் நடக்காமல் இருப்பதே நல்லதென்று ஒரு சாதாரண தமிழர் யோசிக்கக்கூடியளவுக்கே இன்றைய அரசியல் நிலைமைகள் காணப்படுகின்றன.

தமிழ்த் தேசிய பேரவை என்னும் பெயரில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அணியினரும் ஐந்து கட்சிகளின் கூட்டான ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் இடையில் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இப்போது மாகாண சபைகள் தேர்தலை நடத்து மாறு கோருவதும் அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துமாறு கோருவது உடன்பாட்டுக்கு முரணானது என்று பிரசாரம் செய்யப்படுகிறது.

மறுபுறம் உடன்பாட்டின் அடிப்படையிலேயே நாம் செயல்படுகிறோம் என்று மறுதரப்பு கூறிவருகிறது. ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச்சட்டம் தொடர்பில் உறுதியான நிலைப்பாட்டைக் கடந்த காலங்களில் வெளிப்படுத்தியிருந்தது. அந்த வகையில் அவர்களுடைய நிலைப்பாடு வெளிப்படையானது. அவ்வாறனவர்களோடு உடன்பாட்டுக்குச் செல்லும்போதே இந்த விடயத்தை அறிந்து சென்றிருக்க வேண்டும். உடன்பாட்டுக்கு சென்றுவிட்டு, அவர்கள் தங்களின் நிலைப்பாட்டை பொதுவெளிகளில் பேசக்கூடாது என்று வாதிடுவதானது அடிப்படையிலேயே முரண்பாடானது. அதேவேளை அரசியல் அது அரசியல் முதிர்ச்சியான அணுகுமுறையுமல்ல.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் தமிழ் கட்சிகளின் பிரச்னை இப்போது அரசியல் தீர்வோ அல்லது தமிழ் மக்களுக்கான அபிவிருத்தியோ அல்ல. மாறாக, தங்களுடைய அகம்பாவத்துக்குத் தீனி போடுவதும் தங்களில் யார் பெரியவர் என்பதில் மல்லுக்கட்டுவதும்தான். தங்களுடைய அகம்பாவ மல்லுக்கட்டலுக்கு ஒவ்வொருவரும் சில சுலோகங்களையும் வாதங்களையும் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

ஒரு கட்சிக்குள் மோதுதல், பின்னர் கட்சிகளுக்குள் மோதுதல் அதே போன்று கூட்டணிகளை உருவாக்கிவிட்டு பின்னர் அதற்குள் மோதுதல் - இவற்றில் ஏதாவது ஒன்று மக்களுடன் தொடர்புடையதா? நிச்சயமாக இல்லை. இதன் காரணமாகத்தான் தமிழ் மக்கள் கட்சிகளை வெறுக்கின்றனர். எனினும் தமிழ் உணர்வின் அடிப்படையில் வாக்களிக்கின்றனர். இந்த நிலைமையை அரசியல் கட்சிகள் தங்களுக்கு சாதகமாக்கிக் கொண்டு பின்னர் தங்களில் யார் பிரதான கட்சி என்னும் வகையில் சண்டையிடுகின்றனர். இந்த நிலைமை தொடர்பில் ஒன்றில் அரசியல்வாதிகள் திருந்த வேண்டும் அல்லது மக்கள் இவர்களை துரத்தியடிக்க வேண்டும். இந்த இரண்டில் ஒன்று நிகழாத வரையில் எதுவும் மாறப் போவதில்லை.

# சபாநாயகருக்கு எதிரான பிரேரணை தயார்நிலையில்!

## ஐக்கிய மக்கள் சக்தி கூறுகிறது

கொழும்பு, ஒக். 20

சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவுக்கு எதிராக பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் வரைவு தயாரிக்கப்பட்டு நிறைவடைந்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி.பெரேரா அறிவித்துள்ளார்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் வரைவு எதிர்வரும் 21 ஆம் திகதி எதிர்க் கட்சிகளின் கட்சித் தலைவர்களிடம் சமர்ப்பிக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

கட்சித் தலைவர்களின் ஒப்புதல் கிடைத்த பின்னர், அதே வாரத்திலேயே எதிர்க் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் கையெழுத்து பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

அதன் பின்னர் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிராக பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எந்தக் காரணமும் இன்றி சபாநாயகர் நிராகரித்தார் என்றும், இதன் மூலம் அவர் பாராளுமன்றத்தை வழிதவறச் செய்தார் என்றும் அஜித் பி. பெரேரா சுட்டிக்காட்டினார்.

சபாநாயகர் மீதான நம்பிக்கை இழந்ததாலேயே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சபாநாயகரின் பக்கச்சார்பான செயற்பாடுகள் தொடர்பாகவும் பல விடயங்கள் இருப்பதாகவும், இதன் காரணமாகவே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபாநாயகர் மீது நம்பிக்கையிழந்துள்ளனர் என்றும் அஜித் பி.பெரேரா தெரிவித்தார்.

எனவே, எதிர்க்கட்சிகளின் அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்புடன் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை பாராளுமன்றத்திற்குக் மிக விரைவாக கொண்டு வர நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# சுங்க திணைக்களம் தடுத்து வைத்துள்ள உப்பை மீள் ஏற்றுமதி செய்ய நடவடிக்கை

கொழும்பு, ஒக். 20

சிக்கல்கள் காரணமாக சுங்கத் திணைக்களத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 23, 500 மெற்றிக் தொன் உப்பை மீள் ஏற்றுமதி செய்யத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு இறக்குமதியாளர்களுக்கு சுங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

உப்பு இறக்குமதி செய்வதற்கான அனுமதி காலத்துக்குப் பின்னர் இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் தரக் குறைபாடு காணப்படும் ஒரு தொகுதி உப்பை வெளியிடுவதற்கு இலங்கை சுங்கம் மறுப்பு வெளியிட்ட நிலையில் அது தொடர்ந்தும் கொழும்புத் துறைமுகத்தில் நீண்ட நாட்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் உப்பு பற்றாக்குறைக்கு ஒரு தீர்வாக உப்பை இறக்குமதி செய்ய அரசாங்கம் முடிவு செய்தது.

இதற்கு அரச மற்றும் தனியார் துறைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

எவ்வாறாயினும் அந்த அனுமதி கடந்த ஜூன் மாதம் 10 ஆம் திகதியுடன் நிறைவடைந்த நிலையில், அதற்கு பின்னர் இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் தரக் குறைப்பாடு காணப்பட்ட உப்பை விடுப்பதற்கு சுங்கத் திணைக்களம் மறுப்பு வெளியிட்டது.

இந்த அறிவிப்பின்படி செயல்படாவிட்டால், சம்பந்தப்பட்ட உப்பு தொகுதி பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்படும் என்று சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ)

# 100 மில்லி மீற்றருக்கும் அதிக பலத்த மழை வீழ்ச்சி ஏற்படும்

கொழும்பு, ஒக். 20

நாட்டின் பல பகுதிகளில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகளவில் பலத்த மழை வீழ்ச்சி பதிவாகக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய, ஊவா, வடமேல் மற்றும் தென் மாகாணங்களின் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிக பலத்த மழை பெய்யக்கூடும் என அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.


இதேநேரம் மேல், சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களிலும் நுவரெலியா மாவட்டத்திலும் இடைக்கிடையே இடியுடன் கூடிய மழை பதிவாகும்.

அத்துடன் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மழையுடனான வானிலை நிலவும் எனவும் அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

எனவே, இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

(எ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். நண்பர்கள், உறவினர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். அரசால் அனுகூலம் உண்டு. விருந்தினர்களின் வருகையால் வீடு களைகட்டும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**இடபம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். புதியவர்கள் அறிமுகமாவார்கள். உறவினர்களால் ஆதாயம் உண்டு. புதுமை படைக்கும் நாள்.

**மிதுனம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. மகளுக்கு நல்ல வரன் அமையும். வெளியூர் பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு.

**கடகம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் தொடர்பு கிடைக்கும். அரசால் ஆதாயம் உண்டு. வாகனப்பழுதை சரி செய்வீர்கள்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் பிணக்குகள் நீங்கும். தள்ளிப் போன விஷயங்கள் உடனே முடியும். விலகி சென்ற உறவினர்கள் விரும்பி வந்து பேசுவார்கள். நல்ல செய்தி வரும்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பழைய கசப்பான சம்பவங்களைப் பற்றி யாரிடமும் விவாதிக்க வேண்டாம். சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள். உடனே உணர்ச்சி வசப்பட்டு கத்தாதீர்கள்.

**துலாம்**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி இருக்கும். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும். சகோதரர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். உடல்நலத்தில் கவனம் தேவை.

**விருட்சிகம்**
உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றி கொள்வீர்கள். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள்.

**தனுசு**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர். நண்பர்களால் ஆதாயம் உண்டு. விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். வர வேண்டிய பணம் தற்போது கைக்கு வரும்.

**மகரம்**
குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பம் விலகும். மகிழ்ச்சியான நிலை உருவாகும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் பழைய பிரச்னைகள் தலை தூக்கும். குடும்பத்தில் எல்லாவற்றையும் நீங்களே இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். யாரையும் தூக்கி எறிந்து பேசாதீர்கள்.

**மீனம்**
தன்னம்பிக்கையுடன் எதையும் செய்ய தொடங்குவீர்கள். மூத்த சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். திறமைகள் வெளிப்படும் நாள்.

யாழ். போதனா மருத்துவமனையின்

# 175ஆவது ஆண்டு நிறைவையொட்டி முத்திரை வெளியீடு, அலுவலகம் திறப்பு




யாழ்ப்பாணம், ஒக். 20

யாழ். போதனா மருத்துவமனையின் 175ஆவது ஆண்டு நிறைவையொட்டி முத்திரை வெளியீடும் உப தபால் அலுவலகம் திறப்பும் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் பேராயர் எஸ். ஜெபநேசன் அடிகளாரும் தெல்லிப்பழை சிறீதுர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகனும் மற்றும் அருட்தந்தை ஜெபரட்ணமும் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன் சண்முகநாதன் சிறீபவானந்தராஜா, ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன், யாழ். மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன், யாழ். போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி, மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-03)

# சங்குப்பிட்டியில் குடும்பப்பெண் படுகொலை: போராட்டத்துக்கு தடை விதித்தது நீதிமன்றம்

யாழ்ப்பாணம், ஒக். 20

காரைநகர் பகுதியைச் சேர்ந்த சுரேஷ்குமார் குலதீபா என்ற இளம் குடும்பப் பெண் கொலை செய்யப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து முன்னெடுக்க திட்டமிடப்பட்டிருந்த போராட்டத்துக்கு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இது தொடர்பில் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தின் தடை உத்தரவு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இந்த வழக்கில் வழக்குத் தொடுநரால் மேற்கொள்ளப்பட்ட சமர்ப்பணத்தையும் தாக்கல் செய்யப்பட்ட ஏ அறிக்கை மற்றும் அணைக்கப்பட்ட கடிதத்தையும் ஆராய்ந்து பார்க்கின்றபோது, பூநகரி சங்குப்பிட்டி பாலத்தின் அருகே சடலமாக கரையொதுங்கிய சுரேஷ்குமார் குலதீபா என்பவர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பிலும் குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டு உரிய தண்டனை வழங்கப்பட்டு, பாதிக்கப்பட்ட பெண்ணின் குடும்பத்தினருக்கு நீதி கிடைக்க வேண்டும் எனவும் இவ்வாறான துன்பகரமான சம்பவங்கள் எமது நாட்டில் இடம்பெறுவதனைக் கண்டித்தும் காரைநகர் பிரதேச சபை முன்பாக அமைதியான வழியில் கண்டனப் பேரணி ஒன்று நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பெண்ணின் உடல் கண்டுபிடிக்கப்பட்டு ஒருசில நாட்களேயான நிலையில் புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு இரண்டு சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவ்வாறான சூழ்நிலையில் கண்டனப் பேரணி ஒன்று இடம்பெறுவது புலன் விசாரணைக்கு பாதகமாக அமையும் என்பதோடு அப்பிரதேசத்தில் தேவையற்ற அமைதியின்மையையும் இது தொடர்பில் பதற்றத்தையும் தோற்றுவிக்கும் என்பதனை அனுமானிக்கக்கூடியதாகவுள்ளது.

எனவே, புலன் விசாரணைகள் திருப்திகரமாக இடம்பெற்று வரும் நிலையில் இவ்வாறான கண்டனப் பேரணி ஒன்று அவசியமற்றதாக கருதி, குறித்த கண்டனப் பேரணியை தடை செய்து கட்டளையாக்குகிறேன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(எ)

## வவுனியாவில் மாணவர்கள் கௌரவிப்பு




வவுனியா, ஒக். 20

வவுனியா மாவட்டத்தில் உயர்தர பரீட்சையில் அதி விசேட சித்திகளைப் பெற்றவர்கள் மற்றும் சாதாரண தர பரீட்சையில் அதி விசேட சித்திகளைப் பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வவுனியா மாநகர சபை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது 165 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டிருந்ததோடு கடந்த முறை மருத்துவ பீடம், பொறியியல் பீடம் உட்பட முதல் நிலையில் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ரிஷாட் பதியுதீன், முத்து முகமது, ப. சத்தியலிங்கம் உட்பட உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-10)

## ஐஸ் போதையுடன் இளைஞன் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 20

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது ஒரு கிராம், 200 மில்லிக்கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் யாழ். மணியந்தோட்டத்தை சேர்ந்த 21 வயதுடைய இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(எ-03)

# துப்பாக்கி வழங்குமாறு உபதவிசாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 20

தென்மராட்சியில் குரங்குத் தொல்லையை கட்டுப்படுத்தும் நோக்கில் சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு வாயுத் துப்பாக்கிகள் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை நகராட்சி மன்ற உபதவிசாளர் ஞா. கிஷோர் முன்வைத்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற மாதாந்த அமர்வில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இந்தக் கோரிக்கையை அனைத்து சபை உறுப்பினர்களும் ஏற்றுக் கொண்டதையடுத்து சபை நிதியிலிருந்து உடனடியாக துப்பாக்கிகள் கொள்வனவு செய்வது என்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.(எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வந்தியின் கைபேசி மீட்பு மேலும் பலர் கைதாக வாய்ப்பு

கொழும்பு, ஒக். 20

கணேமுல்லை சஞ்ஜீவவின் கொலைக்குப் பின்னர் தலைமறைவாக இருந்தபோது இஷாரா செவ்வந்தி பயன்படுத்திய கைபேசி புதைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது. இந்த கைபேசி மூலம் மேலும் பல தகவல்கள் வெளியாகியுள்ளன. இதன்மூலம் மேலும் பலர் கைது செய்யப்பட வாய்ப்புள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, நேபாளத்தில் கைது செய்யப்பட்ட இஷாரா செவ்வந்தி நேற்று முன்தினம் மேலதிக விசாரணைகளுக்காக மீண்டும் மித் தெனிய பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

கைதான செவ்வந்தி உள்ளிட்ட சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் கஜ்ஜா என்ற அருண விதான கமகே என்பவரின் கொலை தொடர்பாகவும் பல தகவல்கள் வெளியாகி உள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கணேமுல்லை சஞ்ஜீவ கொல்லப்படுவதற்கு முதல் நாள், பெப்ரவரி 18ஆம் திகதி, கெஹெல்பத்தர பத்மேவின் உத்தரவின் பேரில் தானும் "கொமாண்டோ சமிந்து" என்பவரும் மித்தெனியவில் தங்கியிருந்தனர் என்று இஷாரா செவ்வந்தி பொலிஸாருக்கு கூறியுள்ளார்.

எனினும், உடனடியாக கொழும்புக்கு வருமாறு கெஹெல்பத்தர பத்மே விடுத்த அறிவிப்புக்கு அமைய, அன்றைய தினமே இருவரும் கொழும்புக்கு திரும்பினர் என்றும் மறுநாள் (பெப்ரவரி 19) நீதிமன்ற வளாகத்தில் வைத்து கணேமுல்லை சஞ்ஜீவ சுட்டுக் கொல்லப்பட்டார் என்றும் அவர் செவ்வந்தி கூறியுள்ளார்.

பெப்ரவரி 18ஆம் திகதி கஜ்ஜா என்ற அருண விதான கமகேவை கொலை செய்வதற்காகவே கெஹெல்பத்ர பத்மே, செவ்வந்தியையும் துப்பாக்கிச் சூடு நடத்திய நபரையும் மித்தெனியவுக்கு அனுப்பியிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இதனிடையில், கணேமுல்லை சஞ்ஜீவவின் கொலைக்குப் பின்னர் தலைமறைவாக இருந்தபோது இஷாரா செவ்வந்தி பயன்படுத்திய கைபேசி புதைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

இந்த கைபேசி மூலம் மேலும் பல தகவல்கள் வெளியாகியுள்ளன. இதன்மூலம் மேலும் பலர் கைது செய்யப் படுவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

# பல அரசாங்க நிறுவனங்களின் இணைய சேவை செயலிழப்பு

கொழும்பு, ஒக். 20

இலங்கை அரச கிளவுட் (Lanka Government Cloud - LGC) சேவையில் ஏற்பட்ட ஒரு செயலிழப்பால் பல அரச நிறுவனங்களால் இயக்கப்படும் இணைய சேவைகளில் தற்காலிக இடையூறுகள் தொடர்கின்றன என்று இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த இடையூறிலிருந்து அரச இணையத்தை உடனடியாக மீட்டெடுக்க பொறியியலாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்களின் கூட்டுக் குழு 24 மணிநேரமும் பணியாற்றி வருகின்றனர் என்று அந்த நிறுவனம் கூறியுள்ளது.

எவ்வாறாயினும், இந்த சம்பவத்தால் எந்த தரவு இழப்பு அல்லது பாதுகாப்பு வழிமுறைகளும் பாதிக்கப்படவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தரவுகள் தொடர்ந்தும் பாதுகாப்புடன் உள்ளது என்றும் இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவை நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளது.

இதனால் பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமத்தைக் குறைப்பதற்காக பிரதேச செயலகங்கள் ஊடாக சான்றிதழ்களின் நகல்களை பெறுவது உள்ள தாக்கம் செலுத்தக்கூடிய சேவைகளுக்கான மாற்றி வழிமுறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன என்றும் கூறப்படுகின்றது.

இந்த சேவைகளில் பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் பிறப்பு, திருமணம் மற்றும் இறப்பு சான்றிதழ் வழங்கும் அமைப்பு, மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் (மேல் மாகாணம் தவிர) இணையவழியிலான வருமான வரி அமைப்பு, பொலிஸ் திணைக்களத்தின் பொலிஸ் அனுமதி சான்றிதழ் அமைப்பு, வணிகத் திணைக்களத்தின் இணையவழியூடான நாட்டின் உற்பத்தி சான்றிதழ் வழங்கும் முறை, ஓய்வூதியத் திணைக்களத்தின் ஓய்வூதிய அமைப்பு, வளிமண்டலவியல் திணைக்களம், நிறுவன பதிவாளர் திணைக்களம் மற்றும் இலங்கையின் கணக்கியல் மற்றும் கணக்காய்வு தரநிலைகள் சபை உள்ளிட்ட பல நிறுவனங்களின் இணையத்தளங்கள் செயலிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# கீரி சம்பா அரிசிக்கு பதிலாக பொன்னி இறக்குமதியாகும்

கொழும்பு, ஒக். 20

கீரி சம்பா அரிசிக்கு மாற்றாகக் கருதப்படும் பொன்னி சம்பா அரிசியை (ஜீ. ஆர். 11) இறக்குமதி செய்வதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் கையொப்பத்துடன் கடந்த 15 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் இந்த விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி இறக்குமதியாளர் ஒருவர் அதிகபட்சம் 52 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய முடியும். அவ்வாறு இறக்குமதி செய்யப்படும் அரிசியை எதிர்வரும் நவம்பர் 15ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் இலங்கை சுங்கத்தில் இருந்து விடுவிக்கப்பட வேண்டும் என அந்த வர்த்தமானி அறிவித்தலில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

கீரி சம்பா அரிசிக்கு மாற்றாகக் கருதப்படும் பொன்னி சம்பா அரிசியை இறக்குமதி செய்ய அண்மையில் அமைச்சரவை அனுமதி வழங்கியது. சந்தையில் கீரி சம்பா அரிசிக்கு நிலவும் தட்டுப்பாட்டை குறைப்பதற்காக இவ்வாறு பொன்னி சம்பா அரிசி இறக்குமதி செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரி-56 துப்பாக்கியின் 50 தோட்டாக்கள் மீட்பு

கொழும்பு, ஒக். 20

நேபாளத்தில் கைது செய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்து வரப்பட்ட ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்கும்பலை சேர்ந்த "கம்பஹா பபா" என்ற சந்தேக நபரிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின்படி ரி-56 துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் 50 தோட்டாக்கள் மீட்கப்பட்டுள்ளன.

களனி பிரிவு குற்றப்புலனாய்வு பணியகத்தில் விசாரிக்கப்படும் கம்பஹா பபா நேற்று முன்தினம் பேலியகொடை பிரிவு குற்ற புலனாய்வு பணியகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

விசாரணையின்போது தெரியவந்த தகவல்களின்படி, கந்தானை - கெரவலப்பிட்டி அதிவேக வீதியின் நுழைவாயிலுக்கு அருகிலுள்ள வடிகால் கட்டமைப்பில் இருந்து சுமார் 50 தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த தோட்டாக்கள் கெஹெல்பத்தர பத்மேவால் தமக்கு வழங்கப்பட்டன என்று அவர் விசாரணையில் கூறியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கைப்பற்றப்பட்ட தோட்டாக்களை வெலிசறை நீதிவான் நீதிமன்றில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது எவ். சி. ஐ. டி. விசேட அறிக்கை

கொழும்பு, ஒக். 20

ரி -56 ரக துப்பாக்கி, வெடிமருந்துகளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டமை தொடர்பில், நிதிக் குற்றப் புலனாய்வு பிரிவு (எவ். சி. ஐ. டி.) அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

/ஹங்கம பகுதியில் துப்பாக்கி, போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட 38 வயதுடைய சந்தேக நபர் ஒருவரை நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கடந்த 17ஆம் திகதி கைது செய்தது.

அவரிடமிருந்து ரி-56 ரக துப்பாக்கி, 63 தோட்டாக்கள், 2 தோட்டாக்கள் மற்றும் 12 போர் தோட்டாக்களை சுடக்கூடிய 2 துப்பாக்கிகள் மற்றும் அவற்றுக்கான 25 தோட்டாக்கள், 34 தோட்டாக்கள் ரிவால்வர் ரக தோட்டாக்கள், ஒரு டிப்பர், கெப் ரக வாகனம் என்பன பறிமுதல் செய்யப்பட்டன.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளில், டிப்ப, கெப் ரக வாகனத்தை, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம், போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவர் வழங்கினார் என்றும் அவர் தற்போது தடுப்புக்காவலில் உள்ளார் எனவும் சந்தேக நபருக்கு 10 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

சந்தேக நபரை தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை, நிதி குற்றப் புலனாய்வு பிரிவு மேற்கொண்டு வருகிறது.

# மோ. சைக்கிளை வான் மோதியதில் ஒருவர் பலி

சிலாபம், ஒக். 20

மாணவர்களை ஏற்றிச் சென்ற வானும் மோட்டார் சைக்கிளும் மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

புத்தளம் - வென்னப்புவவில் கடந்த வெள்ளிக்கிழமை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் தந்தையும் மகளும் பயணித்த நிலையில்,

தந்தை சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மகளும் வானின் சாரதியும் காயமடைந்து மாரவில ஆதார மருத்தவமனையில் சிகிச்சைக் காக சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

# 30 மணி நேரம் நீர் வெட்டு!

கொழும்பு, ஒக். 20

காலியின் பல பகுதிகளில் இன்று திங்கட்கிழமை முதல் 30 மணி நேர நீர் விநியோகத் தடை அமுல்படுத்தப்படும் என நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

இன்று காலை 8.00 மணி முதல் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிவரையிலான காலப்பகுதியில் நீர் விநியோகம் தடைப்படும்.

போபே, போத்தல, அக்மீமன மற்றும் ரத்கம ஆகிய பகுதிகளில் நீர் விநியோகத் தடை அமுல்படுத்தப்படும்.

அத்தியாவசிய பராமரிப்பு பணிகள் காரணமாக இவ்வாறு நீர் விநியோகத் தடை நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

(ஐ)

# பாதாள குழுவுடன் தொடர்பு எஸ். ரி. எவ்வால் பெண் கைது

சிலாபம், ஒக். 20

வெளிநாட்டிலுள்ள குற்றக் குழு உறுப்பினரும் போதைப் பொருள் கடத்தல்காரருமான "ஹீனட்டிய மகேடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி நாட்டில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட 37 வயதுடைய பெண் ஒருவரை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

அவரிடமிருந்து 500 கிராம் "ஹேஷ்" ரக போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்கா - ஆடி அம்பலம பிரதேசத்தை சேர்ந்தவரான அந்தப் பெண், 2023 ஜூன் மாதம் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் ஒன்றுக்கு துப்பாக்கிதாரிகளுக்கு வாகனங்கள் மூலம் உதவிகளை வழங்கியவர் என்றும் கூறப்படுகிறது.

இவர், வென்னப்புவ பிரதேசத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்தபோது விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

அவருக்கு உதவிய ஓட்டோ சாரதியான 25 வயது இளைஞரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

(ஐ)

# எனது உடல், மன ஆரோக்கியத்துக்கு மக்களின் அன்பு, தொடர்பே காரணம்!
## மகிந்த ராஜபக்ஷ சொல்கிறார்

கொழும்பு, ஒக். 20

மக்களின் அன்பு மற்றும் தொடர்புகளே தமது உடல் மற்றும் மன ஆரோக்கியத்துக்குக் காரணம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

"மக்களுடன் சுதந்திரமாக இருப்பதையே நான் மிகவும் விரும்புகிறேன். மக்களுடன் இருப்பது ஒருபோதும் எனக்கு சோர்வை ஏற்படுத்தாது.

இது ஒரு பழக்கம் ஒரு பிணைப்பு அனைவருக்கும் கிடைக்காத ஒரு வாய்ப்பு.

மக்களின் மனதில் உருவாகும் நம்பிக்கை மற்றும் பாசம் ஆகியவற்றின் அடிப்படையில் உருவாகும் மனித உறவுகளே, ஒரு மக்கள் தலைவரின் சகிப்புத்தன்மையையும், தைரியத்துடன் சவால்களை எதிர்கொள்



ளும் திறனையும் வளர்க்கிறது. மக் கள் மத்தியில் இருப்பது என்னை உடலால் மேலும் பலப் படுத்துகிறது் மனதை ஆரோக்கியமாக்குகிறது.

எப்போதும் ஒரே மாதிரி வந்து நலம் விசாரிக்கும், அன்புடன் உரையாடும் பிரியமான மக்களுக்கு நன்றி தெரிவிக்கி றேன் அரசியல் சகாக்களையும் நினைவுகூருகிறேன் உங்கள் அனைவருக்கும் நன்றி," - என்று மகிந்த ராஜபக்ஷ தனது சமூக வலைதளத்தில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உளவள ஆலோசனை குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு

கல்முனை, ஒக். 20

நாட்டில் பாடசாலை மாணவர்களை மையப்படுத்திய குற்றச்செயல்கள், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகள், மாணவர்கள் மற்றும் இளைஞர்களை இலக்கு வைத்தான போதை பாவனை மற்றும் வியாபாரம் போன்ற விடயங்கள் அதிகரித்து காணப்படுகின்றன.

இதனால், மாணவர்களின் பொதுப் பாதுகாப்பு மற்றும் கல்வி எதிர்காலம் குறித்து அதிகளவான அச்சம் தோன்றியுள்ள நிலையில், பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, ஆபத்தான சூழ்நிலையில் உள்ள மாணவர்களை இனங்கண்டு அவற்றிலிருந்து மீட்டு ஆரோக்கியமான பாடசாலை சூழலை உருவாக்கும் நோக்கில் மாணவர்களுக்கான உளவள ஆலோசனை மற்றும் பொதுப் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் இறக்காமம் பொலிஸ் நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு நிகழ்வு, கல்முனை அல்-அமீன் மகாவித்தியாலயத்தில் கல்லூரி முதல்வர் எஸ்.எல். கலந்தர் லெப்பை தலைமையில் நடைபெற்றது.

(எ-06)

## ஹற்றனில் தேசிய தீபாவளி விழா



ஹற்றன், ஒக். 20

"அனைவருக்கும் சமாதானம் மற்றும் சுபீட்சத்தை விரும்பி" எனும் தொனிப்பொருளில் பௌத்த சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் தேசிய தீபாவளி விழா ஹற்றனில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அமைச்சர் ஹினிதும செனவி தலைமையில் நடைபெற்ற இந்த தேசிய தீபாவளிப் பெருவிழாவின் பிரதான பூஜைகள் ஹற்றன் சிறீ மாணிக்கப் பிள்ளையார் கோவிலின் தலைமைக் குரு சன்மதுர குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பௌத்த மத அலுவல்கள் மற்றும் கலாசார பிரதி அமைச்சர் கமகெதர திஸநாயக்க, மத்திய மாகாண ஆளுநர் சரத் அபேகோன், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான மஞ்சுளா சுரவீர, கிருதஷ்ணன் கலைச்செல்வி, நுவரெலியா மாவட்ட செயலாளர் துஷாரி தென்னக்கோன், ஹற்றன் டிக்கோயா நகர சபை தவிசாளர் கருணாரத்ன மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

தேசிய தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட கலாசார ஊர்வலம் ஹற்றன் சிறீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்துக்கு எதிரில் இருந்து ஹற்றன் பிரின்ஸ் மண்டபம் வரை சென்றது.(எ)

## போதைப்பொருட்களுடன் களியாட்டம் நுவரெலியாவில் 18 பேர் கைதாகினர்

நுவரெலியா, ஒக். 20

பல்வேறு போதைப்பொருட்களுடன் நீண்ட வார விடுமுறைக்காக நுவரெலியாவுக்கு வந்த 18 பேர் சந்தேகத்தின் பேரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் நுவரெலியாவில் நேற்று முன்தினம் நடைபெறவிருந்த களியாட்ட நிகழ்வில் பேஸ்புக் மூலம் அடையாளம் காணப்பட்ட ஒரு குழுவும் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் தெமட்டகொட, கம்பஹா, கொழும்பு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 18 - 28 வயதுக்குட்பட்டவர்கள் என்றும் நாட்டுக்கு சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட குஷ், ஹெரோயின், ஐஸ் போதைப் பொருட்கள் மற்றும் வெளிநாட்டு சிகரெட்கள் வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா பொலிஸ்துறை மோப்ப நாய் பிரிவின் உதவியுடன், நுவரெலியாவுக்குள் உள்நுளையும் அனைத்து பிரதான வீதிகளை உள்ளடக்கிய பொலிஸ் சோதனை சாலைத் தடைகளைப் பயன்படுத்தி சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

நீண்ட வார இறுதி மற்றும் தீபாவளி பண்டிகை காலம் காரணமாக இலங்கையில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஏராளமான உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் நுவரெலியாவுக்கு வந்துள்ளதாக நுவரெலியா சுற்றுலா ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (எ)

## "நாட்டை அதல பாதாளத்துக்குள் தள்ளுவதற்கு எதிர்க்கட்சி முயற்சி"

மட்டக்களப்பு, ஒக். 20

நாட்டை மீண்டும் அதல பாதாளத்துக்குள் தள்ளுவதற்கு எதிர்க்கட்சிகள் முயற்சிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தெரிவித்தார்.

இந்த நாட்டை போதை நாடாக மாற்ற முயற்சித்து தோல்வியடைந்த ஆட்சியாளர்கள் மற்றும் திராணியற்ற எதிர்க்கட்சியாக இருந்து வரும் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியினர் கடந்த காலத்தில் மத்திய வங்கி கொள்ளைக்காரர் ஐக்கிய தேசிய கட்சியுடன் சேரமாட் டோம் என்றார்கள். ஆனால், இன்று வங்குரோத்து அரசிய லுக்காக மீண்டும் ஒன்று சேர்ந்து நாட்டை பாதாளத்துக்குள் தள்ளுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் அவர் கூறினார்.

மட்டக்களப்பில் உள்ள அவரது காரியாலயத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் சட்டத்தை சரியான முறையில் நடைமுறைப்படுத்தி வருகின்றோம் என்பதை நீங்கள் அவதானிக்க முடியும். விசேடமாக இஷாரா செவ்வந்தி கைது செய்யப்படுவாரா? என பாராளுமன்றத்தில் கூட பேசப்பட்டது.

ஆனால், எந்தவொரு நாட்டில் இருந்தாலும் அவர்களை கைது செய்து வரக்கூடிய அரசாங்கமாக இன்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.

மத்திய வங்கி கொள்ளையர்களுடன் ஒன்று சேரமாட்டோம் என சஜித் பிரேமதாஸ அணியினர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

கடந்த காலத்தில் ரணில், ராஜபக்ஷ என நாங்கள் குறிப்பிடும் போது ரணிலுடன் மகிந்தவுக்கு நேரடியாக உறவு இருந்ததன் காரணமாக பின் கதவால் இந்த நாட்டுக்குள்ளே உள்ள பாராளுமன்றத்துக்கு வந்தவர் தான் இந்த ரணில் விக்கிரம சிங்க. இவர் ஜனாதிபதியாக வருவதற்கு பல முயற்சிகளை மேற்கொண்டு மகிந்தவுடன் இணைந்து ஜனாதிபதி ஆனார். இதற்கு சஜித் கட்சி அணியினர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

அன்று ஒன்று சேரமாட்டோம் என்று கூறிய சஜித் அணியினர் இன்று அந்த நிலையை மாற்றி, அதே கட்சியுடன் இணைந்து தங்கள் ஆட்சி அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்வதற்காக பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்- என்றார்.

(எ)

## திருமலையில் விபத்து

திருகோணமலை, ஒக். 20

திருகோணமலை- மடத்தடி சந்தியில் பட்டா ரக வாகனம் மோட்டார் சைக்கிளில் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் திருகோணமலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த விபத்துச் சம்பவம் நேற்று ஞாயிற் றுக்கிழமை காலை இடம் பெற்றுள்ளது.

மடத்தடி சுற்றுவட்டத்தின் ஊடாக திருஞானசம்பந்தர் வீதிக்கு செல்ல முற்பட்ட மோட்டார் சைக்கிள்மீது பிரதான வீதியின் வழியாக மடத்தடி சந்தியை நோக்கி பயணித்த பட்டா ரக வாகனம் மோதியதில் இவ் விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. விபத்து இடம்பெற்ற இடத் தில் இருந்து சுமார் 15 மீற்றர் தூரம் மோட்டார் சைக்கிள் இழுத்துச் செல்லப்பட்டுள்ளது.

குறித்த விபத்துச் சம்பவத்தில் லிங்கநகர் பகுதியைச் சேர்ந்த தங்கராசா என்பவர் படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை திருகோணமலை தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)


## மதுபான விற்பனை நிலையங்களுக்கு ஓராண்டுக்கு ரூ.15,000 அறவிட தீர்மானம்

நாவிதன்வெளி, ஒக். 20

அம்பாறை, நாவிதன்வெளி பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள மதுபான விற்பனை நிலையங்களுக்கு வியாபார உரிமத்துக்கு ஓராண்டுக்கு அறவிடப்படும் கட்டணத்தை 15 ஆயிரம் ரூபாயாக நிர்ணயித்துள்ளது.

நாவிதன்வெளி பிரதேச சபையின் மாதாந்த கூட்டம் சபை மண்டபத்தில் தவிசாளர் இந்திரன் ரூபசாந்தன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போதே கட்டணம் அதிகரிக்கப்பட்டது.

## நிந்தவூரில் சிரமதானப்பணி



அக்கரைப்பற்று, ஒக். 20

அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் கிளீன் சிறீலங்கா வேலைத் திட்டத்துக்கமைய நிந்தவூர் ஆதார மருத்துவமனையில் சிரமதானப்பணி நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. (எ)

## விசேட அலகுக்குரிய ஆசிரியர்களுக்கான சமுதாய மட்ட புனர்வாழ்வு பயிற்சிநெறி

திருகோணமலை, ஒக். 20

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள விசேட அலகுக்குரிய ஆசிரியர்களுக்கான சமுதாய மட்ட புனர்வாழ்வு தொடர்பான பயிற்சி, மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சுதாகரன் தலைமையில் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில், மேலதிக அரசாங்க அதிபர் கருத்து தெரிவிக்கும் போது, சாதாரண பிள்ளைகளுக்கு எவ்வாறான திட்டங்கள் அரசாங்கத்தின் கொள்கைகளின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகின்றதோ அதே அளவுக்கு மாற்றுத்திறனாளி பிள்ளைகளுக்கும் அரசாங்கத்தால் பல்வேறுபட்ட திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இவ்வாறான சகல திட்டங்களும் அரசாங்கத்தால் இலவசமாக மேற்கொள்ளப்படுகின்றது.

இலவசமாக வழங்கப்படுகின்ற திட்டங்களை பயன்படுத்தி மாற்றுத்திற னாளிகளை அடுத்த நிலைமைக்கு கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு சகலருக்கும் உள்ளது. முக்கியமாக விசேட பிரிவுக்குரிய ஆசிரியர்களின் பங்கு மிகப்பெரியது.

மேலும், மாற்றுத்திறனாளி பிள்ளைகள் தொடர்பான பல்வேறுபட்ட திட்டங்கள், சமூக சேவைகள் திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. மாற்றுத்திறனாளிகள் தொடர்பான ஆரோக்கியமானதொரு சூழ்நிலையை நாம் எல்லோரும் சேர்ந்து உருவாக்க வேண்டும்- என்றார்.

(எ-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை...

இந்த ஆவணங்கள் அனைத்தும் மிகப்பாதுகாப்பாக டிஜிற்றல் ஆதார திரட்சி கட்டமைப்பின் ஊடாக பேணப்படுகின்றன. இவற்றில் மீறல்களுக்கான பொறுப்பாளிகளுடன் தொடர்புடைய ஆவணங்கள் ஒப்பீட்டளவில் குறைவாகவே இருக்கின்றன என்று இலங்கை பொறுப்புக்கூறல் செயல்திட்டம் தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் பேரவையில் கடந்த 2021ஆம் ஆண்டு இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக மனித உரிமைகள் ஆணையாளர் பணிமனையால் "இலங்கை பொறுப்புக்கூறல் செயல்திட்டம் எனும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதன்கீழ், இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல், மனித குலத்துக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்பில் ஆதாரங்கள் சேகரிக்கப்பட்டு, உரியவாறு மதிப்பீடு செய்யப்பட்டு, சர்வதேச நியாயாதிக்கத்தின் கீழான வழக்குத்தொடரல் தேவைப்பாடுகளுக்காக உரியவாறு களஞ்சியப்படுத்தப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

சேகரிக்கப்பட்டவற்றில் 37 ஆயிரத்து 905 ஆவணங்கள் சட்டவிரோத படுகொலைகள் தொடர்பானவை. 48 ஆயிரத்து 70 ஆவணங்கள் வலிந்து காணாமல் ஆக்கப்படல்கள் தொடர்புடையவை, 32 ஆயிரத்து 99 ஆவணங்கள் பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான மீறல்கள் தொடர்புடையவை, 9 ஆயிரத்து 163 ஆவணங்கள் சிறுவர்களுக்கு எதிரான மீறல்கள் குறித்தவை, 26 ஆயிரத்து 185 ஆவணங்கள் சித்திரவதைகள் தொடர்புடையவை என்றும் கூறப்படுகிறது. (ஐ)

## வல்வெட்டி...

இந்தப் படுகொலை இடம்பெற்றது. மூன்று நாட்களாக இந்தப் படுகொலை நடந்தது. வீதிகளில் - ஒழுங்கைகளில் சடலங்கள் காணப்பட்டன.

அத்துடன், கடற்றொழில் உபகரணங்களும் நாசமாக்கப்பட்டன. இது தொடர்பில் ஐ. நாவுக்கு 150இற்கும் மேற்பட்ட சத்தியக் கடதாசிகளையும் படுகொலை தொடர்பான விரிவான அறிக்கையையும் நாங்கள் அனுப்பி வைத்தோம். இது தொடர்பான பொறுப்புக் கூறலை சம்மந்தப்பட்ட தரப்பினர் ஏற்க வேண்டும்.

இந்திய அமைதிப் படை வடக்கு, கிழக்கில் நிலை கொண்டிருந்த காலத்தில் சுமார் 15 ஆயிரம் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இதற்கு இந்திய அரசு முழுமையான இழப் பீட்டை வழங்க வேண்டும் அத்துடன், இந்திய அரசு தமிழ் மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும்.

88ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்த படுகொலை சம்பவத்துக்கான இழப்பீட்டை அன்றைய காலத்துக்கான பெறுமதியை இன்றைய காலத்துக்கான பெறுமதியுடனும் அதற்கான வட்டியுடனும் வழங்க வேண்டும். இந்திய அமைதி காக்கும் படையினரின் நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட 1989 ஒகஸ்ட் மாதத்தில் இடம்பெற்ற வல்வெட்டித்துறை படுகொலை சம்பவமானது. பொது மக்கள் கொல்லப்படுதல், காணாமல் ஆக்கப்படுதல், படுகாயங்களை ஏற்படுத்தல், வீடுகள் - வியாபார நிலையங்கள் மற்றும் மக்கள் தமது வாழ்வாதாரத்தை நடத்த அவசியமான உட்கட்டுமானத்தின் அழிவு உட்பட பெரும் குற்றங்களுக்கு இட்டுச் சென்றது.

வல்வையில் நடந்த மூன்று நாள் அராஜகத்தின்போது நானும் கைது செய்யப்பட்டு உடுப்பிட்டி மகளிர் கல் லூரியில் தடுத்து வைக்கப்பட்டிருந் தேன். அந்தச் சமயத்தில் அந்தக் கல்லூரி வளாகத்தில் சிலர் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டிருக்கலாம். இதனை ஸ்கானர் மூலம் கண்டறிய வேண்டும். எங்கள் எதிர்கால சந்ததியினர் சுதந்திரமாகவும் சுபீட்சமாகவும் சகல உரிமைகளுடனும் வாழவேண்டும். அதற்கான அதிகாரம் வேண்டும். இதற்கான முயற்சியை இந்த அரசாங்கம் செய்யவேண்டும் - என்றார். (ஐ)

## இன்னும்...

ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து ஒன்றாக போட்டியிடுவது என்பது விவாதிக்க அவசியப்படாத ஒன்றாகும். கொள்கை ரீதியாக எங்களுக்குள் பெரியளவில் வேறுபாடுகள் இல்லை. சில இடங்களில் வேறுபாடுகள் உண்டு. ஆனால், அவை இந்த நேரத்தில் தேவைப்படாது. இந்த நாட்டின் பிர தான கட்சியாக இரண்டும் ஒன்றாக பயணிக்க வேண்டுமென மக்கள் விரும்புகின்றனர்.

முக்கியமாக இந்த அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றா மல் நாட்டு மக்களை ஏமாற்றியுள்ளது. இன்னும் சில மாதங்களில் நிச்சயமாக மாகாண சபைகள் தேர்தல் நடைபெறும். மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்துக்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளில் இருந்தும் அழுத்தங்கள் வந்துள்ளன. தேர்தலை நடத்துவது ஜனநாயக கடமையாகும்.

மாகாண சபை என்பது மக்கள் பிரதிநிதிகளால் நிர்வகிக்கப்பட வேண்டியதாகும். அதற்கு முதலமைச்சர் உள்ளிட்ட அமைச்சர் குழு வேண்டும். வெறுமனே ஆளுநர் மாத்திரம் அதை நிர்வகிக்க முடியாது. மாகாண சபைகள் தேர்தல் தாமதமடைந்ததன் காரணமாக இப்போது ஊழல் மோசடிகள் நிறைந்த இடமாக மாறியுள்ளது. எனவே, மாகாண சபை தேர்தல் நாட்டுக்கு தேவை. மக்களுக்கு தேவை. மாகாண சபைகள் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசிய கட்சியும் ஒன்றாக போட்டியிடும் - என்றார். (ஐ)

## ரூ.450 கோடி

வல்வெட்டித்துறை படுகொலை சம்பவத்தின்போது நிகழ்ந்த இழப்புகளுக்கான இழப்பீட்டு பரிந்துரை அறிக்கையை வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு செயலாளர் ந. அனந்தராஜ் வெளியிட்டு வைத்திருந்தார்.

அந்த அறிக்கையில்,

உயிரிழப்புக்கான இழப்பீடுகளை மதிப்பீடு செய்வதற்கு இலங்கை அரசாங்கத்தால் 2022இல் மேற்கொள்ளப்பட்ட முடிவை உதாரணமாக பின்பற்றி, ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் உயிரிழப்புக்கு ஒரு கோடி ரூபாயை இழப்பீடாக வழங்கியதன் அடிப்படையில் 1989ஆம் ஆண்டு நிலவரத்தின்படி 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயாகும். இதனடிப்படையில் வல்வெட்டித்துறை படுகொலை சம்பவத்தின்போது கொல்லப்பட்ட 66 பேருக்கும் 2 கோடியே 97 இலட்சம் (ரூ. 29,750,574) ரூபாய் இழப்பீடாக மதிப்பிடப்பட்டுள்ளது. காயமடைந்த 36 பேருக்கான இழப்பீடாக 13 இலட்சத்து 80 ஆயிரம் (ரூ. 1,380,025) அழிக்கப்பட்ட சொத்துகளுக்கான இழப்பீடாக 5 கோடியே 75 இலட்சத்து 97 ஆயிரம் (57,597,068) ரூபாயுமாக எல்லாமாக 8 கோடியே 87 இலட்சத்து 27 ஆயிரம் (88,727,667) ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறித்த தொகைக்கு 1989 ஒகஸ்ட் முதல் 2025 மே மாதம் வரை யான காலத்துக்கான வட்டியாக 443 கோடி (ரூ. 4,433,174,088) ரூபாய் சேர்த்து 450 கோடி (4,521,901,754.00) ரூபாயை இழப்பீடாக வழங்க வேண்டும் - என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, வல்வை படுகொலை சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. இதன்போது மாவீரர் ஒருவரின் தந்தையான சுந்தரலிங்கம் பொதுச்சுடரை ஏற்றினார். இதைதத் தொடர்ந்து பங்கேற்றிருந்தவர்களும் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டு, ந. அநந்தராஜ் இழப்புகளுக்கான இழப்பீட்டு அறிக்கை, வல்வெட்டித்துறை ஒரு படுகொலையின் வாக்குமூலங்கள் நூல் ஆகியவற்றை வெளியிட்டு வைத்தார்.

நூலின் முதல் பிரதியை பருத்தித்துறை நகராட்சி மன்ற தவிசாளர் வின்சென் டீ போல் டக்ளஸ் போல் பெற்றுக் கொண்டார். இந்த நிகழ்வில் அரசியல் தரப்பினர், பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் பலர் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

## வரும்...

குறிப்பில்,

"வடக்கு மாகாணத்தில் தற்போது நிலவி வரும் மழையுடனான காலநிலை தொடர்வதற்குச் சாத்தியங்கள் உள்ளன. தற்போது குமரி கடலுக்கு அண்மித்ததாக நிலவுகின்ற காற்றுச் சுழற்சியின் விளைவாக நாட்டின் பல பகுதிகளுக்கும் தொடர்ச்சியான மழை கிடைத்து வருகிறது. அத்துடன், எதிர்வரும் 23ஆம் திகதி வங்காள விரிகுடாவில் புதிய தாழமுக்கும் ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளது.

தற்போதைய மாதிரி கணிப்புகளின் அடிப்படையில் இந்த தாழமுக்கமானது புயலாக வலுப்பெற்று அல்லது வலுக்குறைந்த புயலாக மாற்றம்பெற்று இந்தியாவின் ஆந்திராவில் நெல்லூருக்கு அருகில் கரையைக் கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் தாழமுக்கத்தால் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு நேரடி பாதிப்புகள் எவையும் இல்லை. ஆனால், மழையுடனான காலநிலை தொடர்வதற்கு சாத்தியங்கள் காணப்படுகின்றன.

தாழமுக்கம் காரணமாக எதிர்வரும் 23ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை வடக்கு, கிழக்கு மற்றும் தென்கிழக்குக் கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படும். ஆதலால், கடற்றொழிலாளர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும். அத்துடன், நவம்பர் மாதத்தின் முதலாவது வாரத்திலும் தாழமுக்கம் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன" என்றுள்ளது. (ஐ)

## அனைவரின்...

தோற்கடித்து அநீதியை வென்றது போன்று அனைவரின் இதயங்களிலும் இருள் நீங்கி ஒளிபரவட்டும் என்ற பிரார்த்தனையை தாங்கி அவர்கள் மத அனுஷ்டானங்களில் ஈடுபடுகின்றனர்.

இந்தக் கொண்டாட்டம் தீமைக்கு எதிராக நன்மை வெற்றி பெற்றதை குறிக்கிறது. தற்போது நம் முன்பாக உள்ள பெரும் சவால் போன்றே நாட்டின் முன்னேற்றத்துக்குத் தடையாக இருக்கும் போதைப்பொருள், மறைந்துள்ள குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த அரசாங்கம் பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அனைவரினதும் வாழும் உரிமையை உறுதி செய்வதும் அதை ஒரு சிறந்த மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கான உரிமையாக மேம்படுத்துவதும் எங்கள் முயற்சிகளின் முக்கிய நோக்கமாகும். இதேபோல், நமது பிரஜைகள் மட்டுமன்றி இந்த நாட்டில் வசிக்கும், வருகை தரும் அனைத்து மக்களின் உடல், மன, பௌதிக மற்றும் உணர்வுகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொறுப்புக்காக அரசாங்கமென்ற வகையில் நாங்கள் அர்ப்பணிப்புடன் இருக்கிறோம்.

அனைத்து மதவாத, இனவாத சக்திகளையும் தோற்கடித்து சமூக நீதியை நிலைநாட்டவும் அனைவரும் தங்கள் அனைத்து சிவில் - அரசியல் - கலாசார உரிமைகளையும் தடையின்றி அனுபவிக்கக்கூடிய அனைவரின் சுதந்திரமும் கண்ணியமும் பாதுகாக்கப்படும் ஒரு பாதுகாப்பான நாட்டைக் கட்டியெழுப்பவும் நாங்கள் உறுதிபூண்டுள்ளோம் என்பதை இதன் மூலம் வலியுறுத்துகிறேன்.

தீபாவளி உண்மையிலேயே ஓர் ஒளிப் பண்டிகை. தீபாவளியன்று ஒவ்வொரு வீட்டையும் ஒளிரச் செய்யும் விளக்குகளுடன் "வளமான நாடு - அழகான வாழ்க்கை" தொடர்பிலான இந்த நாட்டு மக்களின் அபிலாசைகளை நிறைவேற்ற நமது ஒன்றிணைந்து செல்லும் பாதை இன்னும் ஒற்றுமை யாக இருக்கட்டும் என்று பிரார்த்தித்து இலங்கையிலும் உலகெங்கிலும் வாழும் அனைத்து இந்து பக்தர்களுக்கும் அவர்களின் இதயங்களை பிரகாசமாக்கும் மகிழ்ச்சிகரமான தீபாவளி நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன் - என்றுள்ளது. (ஐ)

## போதை....

மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன. விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் எடுத்துள்ளனர். (ஐ)

## கட்டுமானத்தை...

கொண்டு இந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று அந்தச் சங்கம் அரசாங்கத்தை கோரியுள்ளது என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மண்டைதீவு, உப்பளங்கள், சேற்றுத் திட்டுகள், உப்புநீர் சதுப்பு நிலங்கள்- கண்டல் இணைச்சூழல்கள், கடற்புற்கள் மற்றும் விரிவான இயற்கையான கண்டல் தாவரங்களின் வாழ்விடங்களை கொண்ட ஒரு சுற்றுச்சூழல் உணர்திறன் மிக்க மற்றும் மிகமுக்கியமான பகுதியாகும். தேவையான சுற்றுச்சூழல் மதிப்பீடுகள் எதையும் பூர்த்தி செய்யாமலேயே மைதானத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இது, இலங்கையின் சுற்றுச்சூழல் சட்டங்களை அப்பட்டமாக மீறும் செயல். கடலோர பாதுகாப்பு மற்றும் கடலோர வளங்கள் முகாமைத்துவச் சட்டத்தின் கீழ், கடலோர பகுதிக்குள் மேற்கொள்ளப்படும் எந்தவோர் அபிவிருத்தி பணிக்கும் அது நிலையானதா என்பதை உறுதிப்படுத்த, முதலில் ஆரம்ப சுற்றுச்சூழல் பரிசோதனை அல்லது சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு நடத்தப்படுவது கட்டாயமாகும்.

சட்டத்தின் பிரிவு 16, இவ்வாறான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு கடலோர பாதுகாப்பு மற்றும் கடலோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களத்தின் முன் அனுமதி அவசியம் என்பதைத் தெளிவாகக் கூறுகிறது. என்றும் அந்தச் சங்கம் கூறியுள்ளது. (ஐ)

## பொலிஸ்...

"மாகாண சபைகள் தேர்தலை அடுத்த ஆண்டு நடத்துவதாக அரசாங் கம் குறிப்பிடுகிறது. ஆகவே, நாங்கள் அந்தத் தேர்தலுக்கு தயாராகவே உள் ளோம். அரசாங்கம் குறிப்பிட்ட பொய் களை மக்கள் நன்கு அறிந்துள்ளார்கள்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவில் போட்டியிடுவதற்கு பெரும்பாலான இளைஞர், யுவதிகள் முன்வந்துள்ளார்கள். நாட்டின் தேசிய பாதுகாப்பு, தேசியத்தை முன்னிலைப்படுத்தியே நாங்கள் செயல்படுகிறோம். போதைப் பொருள், பாதாள குழுக்களுடன் தொடர்பில்லை என்று பொலிஸ் சான்றிதழ் தருவோருக்கு மாத்திரமே தேர்தலில் போட்டியிட வேட்புமனு வழங்குவோம். பொலிஸ் சான்றிதழ் ஒப்படைப்பது கட்டாயமாகும் - இவ்வாறு நேற்று முன்தினம் தனது கட்சி பணிமனையில் இளைஞர் அமைப்புகளை சந்தித்தபோது மேலும் தெரிவித்தார்.(ஐ)

## காஸா...

இதனிடையே, ரஃபாவில் ஹமாஸ் போராளிகள் றொக்கெட் மூலம் இயக்கப்படும் கையெறி குண்டுகளை வீசினர் என்று இஸ்ரேலிய இராணுவம் கூறியதுடன் பதில் தாக்குதலை நடத்தியதாகவும் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, பாதுகாப்பு அதிகாரிகளுடன் உடனடியாக ஆலோசனை நடத்தினார் என்றும் போர் நிறுத்த மீறல்களுக்கு எதிராக "வலுவான நடவடிக்கை" எடுக்குமாறு இராணுவத்துக்கு உத்தரவிட்டார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆனாலும் முழு அளவிலான போரை தவிர்க்குமாறு பெஞ்சமின் நெத்ன்யாகு பரிந்துரைத்தார் என்றும் கூறப்பட்டுள்ளது.

இதேநேரம், ரஃபா நகரில் தாங்கள் மோதலில் ஈடுபடவில்லை என்று ஹமாஸ் இயக்கம் மறுத்துள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் கடந்த 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை போர் நிறுத்தத்தில் ஒப்பமிட்டன. அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் முயற்சியால் இந்தப் போர் நிறுத்தம் ஏற்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# அமைச்சர், பிரதி அமைச்சர்களுக்கு இனி எம். பிக்களுக்கான சம்பளமே!

## பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன

கொழும்பு, ஒக். 20

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சம்பளத்தை மட்டும் பெறுவதற்கு அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் முடிவு செய்துள்ளனர். அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கென வழங்கப்படும் எரிபொருளை நிராகரிக்கவும் தாம் தீர்மானித்துள்ளனர் என்று பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள முறைமைக்கு அமைய அமைச்சர் அல்லது பிரதி அமைச்சருக்கு அமைச்சின் வரப்பிரசாதங்களின் கீழ் எரிபொருள், சம்பளம் என்பன வழங்கப்பட வேண்டும். இதேபோன்று, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகளின் கீழ் எரிபொருள், சம்பளம் ஆகியன கிடைக்க வேண்டும் என்பதும் சட்டத்துக்கு உட்பட்டதாகும்.

அந்தவகையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான கொடுப்பனவின் கீழ் மாதாந்த சம்பளத்தை மாத்திரம் பெற்றுக்கொள்வும் அமைச்சர்களுக்கான கொடுப்பனவின் கீழ் எரிபொருள் கொடுப்பனவை மாத்திரம் பெற்றுக்கொள்வதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய பிரதி அமைச்சர் மேலும் கூறினார். (ஐ)

# 15 நாட்களில் மட்டும் 75,657 சுற்றுலாவிகள்

கொழும்பு, ஒக். 20

நாட்டுக்கு இந்த மாதத்தின் முதல் 15 நாட்களில் மாத்திரம் 75 ஆயிரத்து 657 சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதி கார சபை தெரிவித்துள்ளது.

இதேநேரம், இந்த வருடத் தின் குறித்த காலப்பகுதி வரையில் மாத்திரம், 1,801,151 சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர்.

இந்தியாவிலிருந்து அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். அத்துடன், சீனா, பிரித்தானியா, ஜேர்மனி, ரஷ்யா உள்ளிட்ட நாடுகளிலிருந்தும் அதிகளவான சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# இந்த ஆண்டில் மட்டும் 35 மலேரியா நோயாளர்

கொழும்பு, ஒக். 20

இந்த ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் நாட்டில் 35 மலேரியா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஒருவர் உயிரிழந்தார் என்று மலேரியா எதிர்ப்பு பிரசார பிரிவு தெரிவித்துள்ளது.

2016ஆம் ஆண்டில் மலேரியா இல்லாத நாடாக இலங்கை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. அண்மையில், பதிவான நோயாளர்கள் வெளிநாட்டிலிருந்து திரும்பியவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

071 284 1767 என்ற கைபேசி மூலம் பொதுமக்கள் மலேரியா பற்றிய மேலதிக தகவல்களைப் பெறலாம் என்று மலேரியா எதிர்ப்பு பிரசார பிரிவின் ஆலோசகர் சமூக மருத்துவர் இந்தீவரி குணரத்ன தெரிவித்துள்ளார். (ஐ)

# தரம் -5 பரீட்சை மீள்திருத்த பெறுபேறுகள் வெளியாகின

கொழும்பு, ஒக். 20

2025 ஒகஸ்ட் 10ஆம் திகதி நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் மீள்திருத்த பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகப்பூர்வ வலைத்தளமான www.doenets.lk அல்லது www.results.exams.gov.lk க்கு சென்று சுட்டெண்ணை உள்ளிடுவதன் மூலம் பெறுபேறுகளைப் பெறலாம்.

பெறுபேறுகள் தொடர்பாக ஏதேனும் சிக்கல் இருந்தால் பரீட்சைகள் திணைக்களத்தின் 1911, 011 278 4208, 011 278 4537, 011 278 5922 011 278 4422 என்ற தொலைபேசி எண்கள் மூலம் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறப்பு

கொழும்பு, ஒக். 20

தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் பல நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் நேற்று திறக்கப்பட்டன.

பொல்கொல்லை மகாவலி நீர்த்தேக்கத்தின் 04 வான் கதவுகள், விக்ரோறியா நீர்த்தேக்கத்தில் வினாடிக்கு 5,190 கன அடி நீர் திறந்து விடப்படுகிறது.

இதேபோன்று, மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளில் பெய்து வரும் கனமழையால் ஏற்படக்கூடிய வெள்ளத்தை கட்டுப்படுத்த இன்று 04 வான்வழிகள் திறக்கப்பட்டன.

இதேவேளை, கலா வாவியின் இரண்டு வான் கதவுகளும் தலா இரண்டு அடி உயர்த்தப்பட்டுள்ளது. இதனால், வினாடிக்கு 3,447 கன அடி நீர் திறக்கப்படுகிறது.

அநுராதபுரம் இராஜாங்கனை நீர்த்தேக்கத்திலும் 6 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. அங்கமுவ நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. வினாடிக்கு 2,824 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. (ஐ)

# பிரதமர் ஹரிணி நாடு திரும்பினார்

கொழும்பு, ஒக். 20

இந்திய பயணத்தை நிறைவு செய்து பிரதமர் ஹரிணி அமரசூரிய நாடு திரும்பியுள்ளார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு கட்டுநாயக்கா பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை பிரதமர் வந்தடைந்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் பிரதமர் ஹரிணி கடந்த 16 ஆம் திகதி இந்தியா சென்றிருந்தார்.

இதன்போது, இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அரசியல் தலைவர்களை சந்தித்து கலந்துரையாடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வாடகைக்கு பெறப்பட்ட வீட்டில் போதை செடி பயிரிட்டவர் கைது

கொழும்பு, ஒக். 20

வாடகைக்கு பெறப்பட்ட வீட்டில் குஷ் போதைப் பொருள் தயாரிப்புக்கான செடியை பயிரிட்ட பெலாரஸ் நாட்டைச் சேர்ந்தவரை காலி மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

அக்மீமன பகுதியில் தான் வசித்த வீட்டின் இரு அறைகளில் அவர் போதைப்பொருள் தயாரிப்புக்கான செடிகளை பயிரிட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். நாட்டுக்கு வரும் வெளிநாட்டினருக்கு விற்பனை செய்வதற்காக அவர் இந்தப் போதைப் பொருளை பயிரிட்டுள்ளார்.

குறித்த வீடு கராப்பிட்டி மருத்துவமனையின் மருத்துவர் ஒருவருக்கு சொந்தமானது என்றும் அந்த வீட்டுக்காக சந்தேகநபர் 1.5 இலட்சம் ரூபாயை வாடகையாக செலுத்தியுள்ளமையும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (ஐ)

# வாகன இறக்குமதி வருமானம் ரூ. 55 ஆயிரம் கோடிக்கு இலக்கு

கொழும்பு, ஒக். 20

அரசாங்கம் அடுத்த வருடம் வாகன இறக்குமதி மூலம் தமது வருமானத்தை 55 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரிக்க எதிர்பார்ப்பதாக ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி, வாகன இறக்குமதி மூலம் இந்த வருடம் 65 ஆயிரம் கோடி ரூபாய் வருமானத்தை எட்டுவதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

இதுவரை வாகன இறக்குமதி மூலம் 45 ஆயிரம் கோடி ரூபாய் வருமானத்தை அரசாங்கம் பெற்றுள்ளது. அத்துடன், அடுத்த வருடத்துக்கான வரவு - செலவு திட்டம் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளமையால் தற்போதுள்ள வரிகள் திருத்தப்பட வாய்ப்பில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐந்து ஆண்டுகளுக்கும் மேலான பழமையான வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கும் கோரிக்கை அடுத்த வருட வரவு - செலவு திட்டத்தில் பரிசீலிக்கப்படாது எனவும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அதிக விலைக்கு குடிதண்ணீர் ரூ. 2.5 கோடியை கடந்த அபராதம்

கொழும்பு, ஒக். 20

நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக குடிதண்ணீர் போத்தலை விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு விதிக்கப்பட்ட அபராதம் 2.5 கோடி ரூபாயை கடந்துள்ளது என்று நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த ஏப்ரல் 1 ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 30ஆம் திகதி வரையான (6 மாதங்கள்) காலப்பகுதியில் இந்த அபராதம் விதிக்கப்பட்டது.

இந்தக் காலப் பகுதியில் நாடு முழுவதும் சுமார் 306 சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இவற்றில் பெரும்பாலானவை கொழும்பு மாவட்டத்தை மையமாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# "மாகாண சபைகளை ஒழிப்பதால் அரசின் செல்வாக்கு வீழ்ச்சியுறும்"

கொழும்பு, ஒக். 20

மாகாண சபைகள் முறைமையை சர்வஜன வாக்கெடுப்பு மூலம் ஒழிப்பதானது தேசிய மக்கள் சக்திக்கு கணிசமான செல்வாக்கு வீழ்ச்சியை ஏற்படுத்தும் என்று கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகளுக்கான தேர்தல் தொடர்ச்சியாக தாமதிக்கப்பட்டு வருவது தொடர்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இலங்கை தொடர்பான ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் அதன் முகப்புரையில் அரசியல் அதிகார பரவலாக்கல் குறித்த தனது உறுதிப்பாடுகளை நிறைவேற்றுமாறு இலங்கை அரசாங்கத்துக்கு அழைப்பு விடுப்பதாக குறிப்பிட்டுள்ளது. அது, நல்லிணக்கம் மற்றும் மக்கள் அனைவரும் மனித உரிமைகளை முழுமையாக அனுபவிப்பதற்கு வழிவகுக்கும் என்றும் மாகாண சபைகள் தேர்தலை நடத்துவது உட்பட உள்ளூர் நிர்வாகத்தை மதிக்குமாறு அரசாங்கத்தை ஊக்குவிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது. மாகாண சபை கள் தேர்தலை நடத்தவும் அந்தத் தேர்தல் தடைப்பட்டிருப்பதற்கு காரணமாக இருக்கும் சட்ட விடயத் தைத் தீர்க்கவும் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையிலான நிர்வாகம் உறுதியளித்துள்ளது.

தற்போதுகூட, தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியனின் தனிநபர் தீர்மானத்தின் மூலம் சட்டச் சிக்கலுக்கான தீர்வைக் காணமுடியும். அதுமட்டுமன்றி, மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதால் ஆட்சியா ளர்களுக்கு நெருக்கடிகள் ஏற்படும் என்ற அச்சம் காணப்படலாம். ஆனால், அரசியல் ரீதியாக மிகவும் விலையுயர்ந்ததாகவும், சர்வதேச ரீதியாக அழுத்தங்கள் ஏற்படுத்தக்கூடிய போர் காலப் பொறுப்புக்கூறல் பிரச்னைகளில் காணப்படுகின்ற நெருக்கடிகளை குறைப்பதற்கு அது வழிவகுக்கும்.

இதேவேளை, சிங்கள மொழி ஊடகவியலாளர் சம்பத் தேசப்பிரிய, பெலவத்தையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள ஜே.வி.பி. தலைவர்கள் 13ஆவது திருத்தம் மற்றும் மாகாண சபைகளை ஒழிப்பதற்காக ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதற்கான யோசனையைப் முன்னெடுப்பதாகவும் அதற்காகவே மாகாணங்களுக்கான தேர்தலைத் தவிர்ப்பதாகவும் தகவல் வெளியிட்டுள்ளார்.

இதேநேரம், வடக்கு மற்றும் கிழக்கில் இந்திய முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட பெரிய பொருளாதார வாய்ப்புகளைப் பயன்படுத்தி, இந்தியாவின் எதிர்ப்புகளை, தவிர்க்கலாம் என்றும் அதன் ஊடாக மேற்கத்திய நாடுகளின் எதிர்ப்புகளையும் நடுநிலையாக்க முடியும் என்றும் ஜே. வி. பி. நம்பலாம். ஆனால், உண்மையில் ஆட்சியாளர்களுக்கு உடனடியாக மாகாண தேர்தல் நடத்துவதானது, தாமதமாக நடப்பதை விடச்சிறந்ததாக இருந்தாலும் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அக்கட்டமைப்பை ஒழிப்பதானது, தேசிய மக்கள் சக்திக்கு கணிசமான செல்வாக்கு இழப்பையே ஏற்படுத்தும்- என்றார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.10.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org